Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 204 / 2016

DEPOSITION OF WITNESS : P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசாமி | Father's Name/ Husband Name | : சுப்புராஜ் |
| Village | டி.மீனாட்சிபுரம் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2024

(எதிரிகள் ஆஜர் இல்லை . கு.வி.மு.ச 317 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்து வருகிறேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜில் உள்ள 2 ம் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2016 ம் வருடம் , மே மாதம் ஒருநாள் கையொப்பம் செய்தேன் . தேதி நினைவில் இல்லை . பாண்டியராஜன் தோட்டத்தில் வைத்து நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் . நானும் வேலுச்சாமி என்பவரும் , வேலுச்சாமியின் தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்தோம் , அப்போது கண்டமனூர் சார்பு ஆய்வாளர் அங்கு வந்து சம்பவயிடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதில் நானும் , வேலுச்சாமி என்பவரும் கையொப்பம் செய்தோம் . பார்வை மகஜர் **அசா.ஆ.4**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் கு.வி.**

சம்பவயிடமும் நான் குடியிருக்கும் இடமும் 3 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான் . சம்பவயிடத்தில் எனக்கு எந்த தோட்டமும் கிடையாது . வேலுச்சாமி என்பவருக்கு தோட்டம்

உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலும் செய்தார்களா என்றால் சரிதான். போலீசார் சம்பவயிடம் வந்து பார்வையிட்டு வரைபடம் வரைந்து , பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரிதான் . பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்று போலீசார் படித்து காண்பித்த பின் தான் நான் கையொப்பம் செய்தேன் . அசா.1 முருகன் யாருடைய தோட்டத்தினை குத்தகைக்கு பார்க்கிறார் என்றால் எனக்கு தெரியாது.

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.03.05 16:25:36 +0530

Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 204 / 2016**

DEPOSITION OF WITNESS : P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகர்ராஜா | Father's Name/ Husband Name | : கோவிந்தன் |
| Village | கோட்டைபட்டி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2024

(எதிரிகள் ஆஜர் இல்லை . கு.வி.மு.ச 317 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் தோட்டத்திற்கு மருந்து அடிக்கும் வேலை செய்து வருகிறேன் . வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் . அசா.1 ஐ எனக்கு தெரியும். எனக்கு தேதி நினைவில் இல்லை , கடந்த 2016 ம் வருடம் மே மாதம் அசா .1 பராமரித்து வரும் தோட்டத்திற்கு நான் மருந்து அடிக்கச் சென்றேன் . அப்போது காலை 7.30 மணியளவில் நானும் , காசிமணி என்பவரும் ஒரு இருசக்கர வாகனத்திலும் , அசா.1 மற்றொரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம் . நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண். TN 60 J 6224 Unicorn வாகனம் , மற்றொரு வண்டியின் எண். TN 60 L 1312 Discover ஆகும்.

அப்போது செல்வம் , ராமு, பாண்டியராஜன் ஆகிய 3 பேரும் , அருவாள் , கடப்பாரை கம்பி, மண்வெட்டி கனையால் நாங்கள் சென்ற வாகனங்கள் இரண்டையும் அடித்து நொறுக்கி தீ வைத்தனர் . அசா.1 யை பார்த்து அசிங்கமாக பேசி , என் கையால் தான்டா உனக்கு சாவு என மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காசிமணியும் , நானும் இருசக்கர வாகனத்தில் தோட்டத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல . அசா.1 முருகன் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல . சம்பவ நேரத்தில் நான் மருந்து அடிக்கத்தான் சென்றேன் , தோட்டத்தில் இருந்தேன் மருந்தினை அடிக்கவில்லை . 3 எதிரிகளையும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . சம்பவயிடத்தில் பைக் மோட்டார் ரூம்பிற்கு முன் இரு பைக்குகளும் இருந்தது . நான் சம்பவயிடத்தில் இருந்த போது அசா .1 தோட்டத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

3 எதிரிகளில் பாண்டியராஜன் என்பவர் தான் வாகனங்களை தீ வைத்தார் , மற்ற எதிரிகள் சம்வயிடத்தில் பைக்கை அடித்து நொறுக்கினார்கள் . என்னை போலீசார் எங்கு வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவயிடத்தில் தான் . போலீசார் சம்பவயிடத்தில் இருந்து இரு வாகனங்களையும் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். முருகனுக்கும் , பாண்டியராஜனுக்கும் தான் நிலத்து பிரச்சனை இருந்தது , செல்வம் ,ராமு ஆகியோருக்கும் அசா.1ம் நிலப்பிரச்சனை கிடையாது என்றால் சரிதான்.

எதிரிகள் வண்டியை தீ வைக்கும் போது நான் தடுத்தேனா என்றால் அவர்கள் கையில் கம்பு , அருவாள் , கடப்பாரை இருந்ததால் நான் தடுக்க போகவில்லை . கம்பு , அருவாள் , கடப்பாரை ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் எதிரிகள் புதருக்குள் அவற்றை எறிந்துவிட்டார்கள். அவற்றை போலீசார் எடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . இரு வாகனங்களின் பெயர்கள் , எண்கள் எனக்கு தெரியாது என்றாலும் , நான் போலீசார் சொல்லிக் கொடுத்தன் பேரில் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவயிடத்தில் போலீசார் காசிமணி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது . சம்பவயிடம் யாருடைய தோட்டம் என்றால் எல்.எஸ் .முதலியாருக்கு சொந்தமானது. சம்பவயிடத்தில் அசா.1 க்கு சொந்தமான நிலம் கிடையாது , அவர் குத்தகைக்கு தான் பார்க்கிறார் . நான் சம்பவயிடத்தில்

இல்லை என்றாலும் , நான் அசா.1 கேட்டுக் கொண்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . சம்பவயிடத்தில் நான் , முருகன் , காசிமணி ஆகியோர் இருந்தோம் . அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போது நான் அவருடன் போகவில்லை என்றால் சரிதான். அசா.1 என்ன எழுதி புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.03.05 16:25:43 +0530